**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.**

2026–ம் ஆண்டு **ஜீலை** மாதம் 08–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.203/2020**

**வா.சா:–1 (நவீன்குமார்)**

**குறுக்கு விசாரணை (5, 7, 8 பிரதிவாதிகள் தரப்பில்):–**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Tech படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய சாட்சி பிரமாண வாக்குமூலம் ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் சுலபமாக இருக்கும் என்பதால் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை சங்கதிகளை படித்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகள் எல்லாம் உண்மையானது தான் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளில் யார் யார் எதிர்வழக்குரை தாக்கல் செய்தார்கள் யார் யார் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் யார் யார் எங்களுடைய வழக்குரைக்கு பதிலுரை தாக்கல் செய்யவில்லை என்றால் பழனிசாமி, சின்னாகவுண்டர் மற்றும் ரமேஷ்குமார் ஆகியோர்கள் பதிலுரை தாக்கல் செய்யவில்லை. யார் யார் பதிலுரை தாக்கல் செய்தார்கள் என்றால் லதா, பெரியண்ணன் மற்றும் முருகேசன் ஆகியோர் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து பூர்வீக சொத்தாகும். வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தானது யார் பெயரில் கிரையம் இருந்தது என்றால் 1 முதல் 4 அயிட்ட சொத்துகள் பழனிசாமி பெயரிலும் 5வது அயிட்ட சொத்து லதா பெயரிலும் கிரைய பத்திரம் உள்ளது. சிறுவயது முதலே நானும் என் அப்பாவும் ஒரே குடும்பமாகதான் இருந்தோம் என்றால் சரியல்ல. சுமார் பத்து வருடங்களுக்கு முன்பாக அப்பாவுடன் பிரச்சனை ஏற்பட்டு தனியாக பிரிந்து வந்துவிட்டோம். அப்பாவுக்கும் எனக்கும் எப்போது பிரச்சனை ஏற்பட்டது என்றால் 2016ம் வருடம் பிரச்சனை ஏற்பட்டது. 2016ம் வருடம் முதல் யாருடைய பராமரிப்பில் நான் படித்து வந்தேன்

என்றால் அம்மா மற்றும் அண்ணன் பராமரிப்பில் படித்து வந்தேன். 2016 முன்பாக என் அப்பா மற்றும் என் தாத்தா ஆகியோர்கள் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். 2011ம் வருடம் பாகப்பிரிவினை ஏற்பட்ட பிறகு 2016ம் வருடம் வரை அப்பா அம்மா உடன் ஒரே குடும்பமாகதான் இருந்து வந்தோம் என்றால் சரிதான்.

**5, 7 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |